மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது கட்டாயப்படுத்தும் தன்மையில் இல்லை. ஆனால் எல்லா உயர்நிலைப்பள்ளி களிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் சாரணர், சாரணியர் இயக்கத்தை அமைக்க வேண்டுமென்ற முயற்சியை மேற்கொண்டு வருகிறது. அதற்கான திட்டம் பள்ளிக் கல்வி இயக்குநரிடம் கேட்கப்பட்டுள்ளது. இதற்கு ஒதுக்கும் பணம் குறைவாகத்தான் இருக்கிறது. அந்தத் திட்டம் வந்த தற்குப் பிறகு நிதி உதவியையும் செய்து எல்லாப் பள்ளிகளிலும் இந்த சாரணர் சாரணியர் இயக்கம் இருக்க வேண்டுமென்ற கொள்கையை அரசு கொண்டிருக்கிறது. அதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக் கிறது.

New building for school at Ashok Nagar

* 76 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state—

(*a*) whether any new building has been constructed for the Corporation School at Ashok Nagar during 1972-73; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) புதியதாகக் கட்டப்பட்ட இககட்டிடம் ஏற்கெனவே இவ்விடத்தில் உள்ள மூன்று வகுப்பறைகளைக் கொண்ட பள்ளிக்கான இணைப்பாகும். புதிதாகக் கட்டப்பட்டுள்ள இக் கட்டிடத்தில் நான்கு வகுப்பறைகளும், தலைமை ஆசிரியரின் அறையும், நீரடிககழிப்பிடமும் உள்ளன. இக்கட்டி டத்தின் மொத்தத் தரைப் பரப்பு 2,562 சதுர அடிகளாகும்.

THIRU N. DENNIS : May I know the basis adopted for giving priority to put up new School buildings?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தந்த மாவட்டத்திலேயுள்ள தலைமைக் கல்வியதிகாரிகள் அந்தந்தப் பள்ளிகளின் தன்மைகளையெல்லாம் ஆராய்ந்து கூறுகிறார்கள். சில ஊர்களில் ஈட்டு மான்யம் பெற்று தொகையாக வழங்குகிறார்கள். ஆகவே, மாவட்ட தலைமைக் கல்வி அதிகாரிகள் ஆராய்ந்து எங்கெங்கு தேவைப்படுகிறது, எந்தெந்த இடத்திலே நிதி உதவி பெற முடியாமல் இருக்கிறது என்று கண்டறிந்து அதற்குத் தகுந்த மானியம் அளிக்கப்படுகிறது, அதற்கேற்ற கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

1973 ஆகஸ்ட் 11]

THIRU K. M. SUBRAMANIAM: Since there are many plots reserved for educational institutions in Ashok Nagar and Kalaignar Nagar and also since many are not occupied, will the Hon. the Minister for Education think of leasing them out to anybody or any authority who comes forward to start educational institutions in that area?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றிய விவரக் குறிப்புகள் இல்லை. ஆனால் எந்தெந்த இடங்களில் எதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று கண்டறிந்து, மாநகராட்சி பள்ளி வைக்கவா அல்லது பள்ளிக்கூடங்களுக்கா என்று கண்டறிந்து மாநகராட்சியோ அல்லது அரசோ பள்ளி வைக்கவில்லை என்று ஏற்பட்டால், பள்ளிக்கூடத்திற்கு என்று போதிய இடம் ஒதுக்கப்பட்டிருந்தால், அதை வாடகைக்கு விடலாமா என்று யோசிக்கலாம். அம்மாதிரி மாநகராட்சிப் பள்ளியோ, அரசாங்கப் பள்ளியோ வருகிறதா என்று பார்க்க வேண்டும். அவை இரண்டும் வரவில்லை என்றால் தனியார் பள்ளிக்கூடம் வைக்க விண்ணப்பிப்பார்களேயானால் அதைப்பற்றி யோசித்து, ஆராய்ந்து முடிவு செய்யலாம்.

திரு. நா. காசிராமன் : இந்தக் கட்டடம் எத்தனை ரூபாய்க்கு யாருக்குக் காண்டிராக்ட் கொடுக்கப்பட்டது? மு.ப. 10-0

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கட்டடத்திற்கு ஆன மொத்தச் செலவு 64,727 ரூபாய். காண்டிராக்டர்கள் பற்றிய விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால், பதில் சொல்ல முடியும்.

திரு. வை. பாலசுந்தரம் : பெரும்பாலான மாநகராட்சிப் பள்ளிகள் வாடகைக் கட்டடத்தில் நடத்தப்படுகின்றன. கொடுக்கப்பட்ட வாடகைப் பணத்தைப் பார்த்தால் பள்ளிக்கான கட்டடத்தையே வாங்கி விடலாம் போலிருக்கிறது. ஆகவே, மாநகராட்சிகளுக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தரும் நிலையை அரசு உருவாக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்போதே மாநகராட்சி மன்றங்கள் எங்கெங்கு கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறதோ, அங்கெல்லாம் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. அது தவிர, சில குறிப்பிட்ட இடங்களை வாங்குவதைத் தவிர, வேறு வழி இல்லை என்று தெரிகிறபோது, அந்தக் கட்டடத்தைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாநகராட்சி மன்றம் எந்தெந்தக் கட்டடங்களைக் கையகப்படுத்த வேண்டுமென்று கோருகிறார்களோ, அதற்கு உதவி செய்கிற முறையில் அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

திரு. எஸ். வடிவேல் : புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு ஒரு மாதத்தில் விழுந்து விடுகின்றன. போரூராணியில் லட்சக் கணக்கில் செலவழிக்கப் பட்ட பள்ளிக் கட்டடம் விழுந்து விட்டது. அந்தக் கட்டடத்தைக் கட்டிய காண்டிராக்டர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவது பற்றித் தகவல் இல்லை. காண்டிராக்டர்களுக்குச் சிலபல நிபந்த னைகள் போடப்படுகின்றன. அப்படி நிபந்தனைகள் இருந்தால், அரசு நடவ டிக்கை எடுக்க முயற்சி செய்யும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மாநகராட்சி மன்றத்தில் கையகப்படுத்த வேண்டுமென்று ஒரு காலத்தில் தீர்மானம் போட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட கட்டடங்களைக் கூட பின்னால் வேண்டாமென்று சொல்லக்கூடிய அளவுக்கு சூழ்நிலைகள் இருக்கும்போது அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை அரசு துருவிப் பார்த்து நியாயம் வழங்க வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாநகராட்சி மன்றம் என்ன விண்ணப்பத்தை அளிக்கிறதோ, அதை நிறைவேற்ற வேண்டியவா களாக இருக்கிறோம். முதலில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி விட்டுப் பின்னால் வேண்டாமென்று சொல்லுகிறார்கள். ஏன் பிறகு எடுக்க வேண்டாமென்று சொல்லுகிறீர்கள் என்று நானே கேட்டு வற்புறுத்தி இரண் டொரு கட்டடங்களை எடுத்துத்தான் தீரவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அனுப்பச் சொல்லியிருக்கிறேன். அந்த வகையில் தேவையை அனுசரித்து கல்வி இலாகா அதிகாரியையும், மாநகராட்சி ஆணையரையும் கருத்துத் தெரிவிக்க கோரி, அந்த வகையில் கட்டடங்களைக் கையகப்படுத்த வேண்டுமென்று அரசாங்கம் மாநகராட்சிக்கு வற்புறுத்திச் சொல்லி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோவை செழியன் அவர்கள் தம் துணை வினாவில் மகளில் இருவர் பெயரைக் குறிப்பிட்டார். அப்பெயர்கள் இந்த அவை நிகழ்ச்சிக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) வெள்ளிக்குறி இடப்பட் டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]